பக்கங்கள்: 06

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 22 திங்கட்கிழமை 04.04.2022 கதிர் 19

## மஹிந்தரின் தங்காலை வீட்டின் முன்னாலும் மக்கள் போராட்டம்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட இல்லமான தங்காலையில் உள்ள கார்ல்டன் இல்லத்திற்கு முன்பாக இன்று பகல்

☞2

# கோட்டாவுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் முழுங்கிய பல்கலைக்கழக மாணவர்கள்

### பேரணியாக மாறியது போராட்டம்





(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டம் பேரணியாக மாறியது.

யாழ். பல்கலைக்கழகம் முன்பாக மாணவர்கள் இன்று காலை ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பதவியை விட்டு வெளியேறக் கோரியும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.


பல்கலை முன்பாக ஆரம்பமான பேரணி பல மாணவர்களின்

☞2

### சகல கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு

# அமைச்சுப் பதவியை ஏற்க முன்வாருங்கள்!

### நாடே கொதித்தெழுந்து சீற்றத்தில் இருக்கையில் இடைக்கால அரசு அமைக்கும் சமாளிப்பு முயற்சி



**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவியிலிருந்து விலகுமாறு கோரும் எழுச்சிப் போராட்டங்கள் நாடு முழுவதும் பெரும் கொதிப்பாக வெடித்து மக்கள் சீற்றத்துடன் அவற்றில் முழு அளவில் பங்குபற்றி வருகையில், கவிழவிருக்கும் தமது அரசுக்குப் பதிலாக இடைக்கால அரசு ஒன்றை அமைக்கும் சமாளிப்பு முயற்சியில் கோட்டாபாய ராஜபக்ஷ இறங்கியிருக்கின்றார்.**

☞2

## மத்திய வங்கி ஆளுநரும் இராஜினாமா!



இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

தனது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதிக்கு அவர் அனுப்பிவைத்துள்ளார்.

☞2

## மத்திய வங்கியின் புதிய ஆளுநராக கலாநிதி நந்தலால்




இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநராக மத்திய வங்கியின் முன்னாள் சிரேஷ்ட பிரதி ஆளுநர்

☞2

## கிராஞ்சியிலிருந்து களவாக தமிழகம் சென்றவர் கைது!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.04

கிளிநொச்சியில் இருந்து கடந்த 11ஆம் திகதி தமிழகத்திற்கு படகில் சென்று இறங்கி அங்கு தலைமறைவாக வாழ்ந்தவர் தமிழக

☞2

## உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் மாணவர்களும் யாழில் போராட்டம்



யாழ் மாவட்ட உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களால் அரசாங்கத்திற்கு எதிராக யாழ் நகரில் போராட்டமொன்று இன்றைய தினம் மேற்கொள்ளப்பட்டது.

☞2

## கூட்டமைப்பை உடன் கூட்டுமாறு ரெலோ தலைவர் வேண்டுகோள்



தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை உடனடியாக - அவசரமாக நாளை செவ்வாய்க்கிழமை கூட்டுமாறு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கடிதம் மூலம் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனைக் கோரியுள்ளார்.

☞2

## கோட்டா வீட்டுக்குச் செல்லுங்கள் என வலியுறுத்தி வவுனியாவில் இளையோர் வீதி மறியல் போராட்டம்



(வவுனியா நிருபர்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்குச் செல்லுமாறு தெரிவித்து இளையோர் மற்றும் வவுனியா பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து வவுனியாவில் இன்று ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

☞2

## நான்கு அமைச்சர்கள் நியமனம் நிதி அமைச்சரானார் அலி சப்றி

### கல்வி - தினேஷ், வெளிவிவகாரம் - பீரிஸ், நெடுஞ்சாலைகள் - ஜோன்ஸ்டன்



முழுமையான அமைச்சரவை நியமிக்கப்படும் வரை நாடாளுமன்றம் மற்றும் நாட்டின் ஏனைய செயற்பாடுகளைச் சட்ட ரீதியாகவும் நிலையாகவும் பேணுவதற்காக நான்கு

☞2

## யாழ். பல்கலை கல்வி நடவடிக்கைகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தம்

### விடுதிகளிலிருந்து வெளியேறுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல்

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கல்விசார் நடவடிக்கைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன. அத்துடன் விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களை வீடுகளுக்குச் செல்லுமாறும்

☞2

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# பொகவந்தலாவையில் போராட்டம்







நாட்டின் அத்தியாவசிய பொருள்களின் விலை யேற்றம் மற்றும் டீசல், மண்ணெண்ணை தட்டுப்பாடு போன்றவற்றுக்கு எதிராகவும் நாட்டின் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாகப் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியும் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று பொகவந்தலாவை டின்சின் நகரில் இன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் டின்சின் மற்றும் அப்பகுதியில் உள்ள சில தோட்டங்களைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

## பஸில், சமல், நாமல், சசீந்திரா அமைச்சுப் பதவிகளை ஏற்கார்



நாட்டில் எழுந்துள்ள அரசியல், பொருளாதார நெருக்கடிகளைத் தொடர்ந்து ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் அமைச்சுப் பதவிகளை ஏற்கமாட்டார்கள் என்று அறிய வருகின்றது.

புதிய அமைச்சரவையில் அவர்கள் இடம்பெற மாட்டார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## நான்கு அமைச்சர்கள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று நியமித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வெளிநாட்டலுவல்கள் மற்றும் நிதி நடவடிக்கைகள் அமைச்சுப் பதவி மற்றும் நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு சபைத் தலைவர் மற்றும் பிரதம கொறடா ஒருவரை நியமிக்க வேண்டியுள்ளதால் இந்த அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் நிலவுகின்ற தேசிய சவால்களை தீர்ப்பதற்குப் பங்களிக்குமாறு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் ஜனாதிபதி ஏற்கனவே கேட்டுக் கொண்டுள்ளார். எதிர்காலத்தில் அவர்களுடன் கலந்துரையாடி நிரந்தர அமைச்சரவை நியமிக்கப்படும்.

ஒரு நாடு என்ற வகையில் எதிர்நோக்கும் பொருளாதாரச் சவாலை வெற்றி கொள்வதற்கும் நாட்டின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கும் ஒட்டுமொத்த மக்களின் ஆதரவை வழங்குமாறும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நான்கு அமைச்சர்கள் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

01. கல்வி - தினேஷ் குணவர்தன (சபைத் தலைவர்)

02. வெளிநாட்டலுவல்கள் - பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

03. நெடுஞ்சாலைகள் - ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ (ஆளுங் கட்சியின் பிரதம கொறடா)

04. நிதி - அலி சப்ரி

## யாழ். பல்கலை கல்வி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இன்று காலை இடம்பெற்ற பீடாதிபதிகள் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாட்டின் தற்போதைய சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு, மாணவர் நலன் கருதி உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்துப் பீடங்களினதும் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படுவதுடன், விடுதிகளில்தங்கிநிற்கும்மாணவர்களை விடுதிகளில் இருந்து வெளியேறுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும், பரீட்சை மற்றும் அத்தியாவசிய ஆய்வு நடவடிக்கைகளுக்காக மருத்துவ பீடத்தின் இறுதி வருட மாணவர்களுக்கு மாத்திரம் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விடுதிகளில் உள்ள மாணவர்களை வீடுகளுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும், மாணவர்களின் போக்குவரத்து ஏற்பாடுகளுக்கமைய விடுதிகளை விட்டு வெளியேறுவதற்குப் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

## உயர் தொழில்நுட்பக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதாரத்தின்வீழ்ச்சியில்மக்கள்வாழ்க்கையை நசுக்கிடும் அரசாங்கத்தினுடைய செயற்பாடுகளுக்கு எதிராக இதன்போது கோஷங்கள் எழுப்பப்பட்டன.

போராட்டக்காரர்கள் இன்று மதியம் 12 மணியளவில் யாழ்ப்பாணம் பொது சன நூலகத்திலிருந்து ஆரம்பித்து யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திற்கு சென்றனர்.

போராட்டம் காரணமாக யாழ் மாநகரில் சில மணி நேரம் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

## கூட்டமைப்பை உடன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் இடையேயான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நீண்டகாலமாக நடைபெறவில்லை. தற்போதைய அரசியல் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு முடிந்தளவு விரைவாக - நாளை 5ஆம் திகதி - அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கி ஒழுங்கு செய்யுமாறு வேண்டுகிறேன்" - என்று கோரும் கடிதம் ஒன்றை செல்வம் அடைக்கலநாதன் சம்பந்தனுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அனைத்துக்கட்சிகளையும்உள்ளடக்கிய அமைச்சரவை ஒன்றை உருவாக்குவது குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவிப்பு வெளியிட்ட சமயத்தில் இந்தக் கடிதம் செல்வம் அடைக்கலநாதனிடமிருந்து சம்பந்தனுக்கு அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிராஞ்சியிலிருந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிவபுரம் கிராஞ்சியில் இருந்து கடல் தொழிலாளி ஒருவரின் படகைத் திருட்டுத்தனமாக எடுத்துக்கொண்டு தமிழகத்திற்குத் தப்பிச் சென்ற நித்தியானத்தன் என்பவரே இன்று அதிகாலை இராமேஸ்வரம் கியூப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவருடன் வேறு யாரும் தமிழகத்திற்குள் ஊடுருவினரா என தீவிர விசாரணைகள் இடம்பெறுகின்றன.

இதேநேரம் தஞ்சாவூரில் ஓர் வீட்டில் இவர் பணியாற்றினார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கோட்டா வீட்டுக்குச்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பியவாறும், பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், பதாதைகளை ஏந்தியவாறும் போராட்டம் இடம்பெற்றது. அத்துடன் போராட்டக்காரர்கள் ஏ - 9 வீதியை மறித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறிது நேரம் ஏ - 9 வீதியை மறித்துப் போராடிய அவர்கள் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்தாது பின்னர் பிரதான வீதியில் இருந்து விலகிச் சென்று வீதியோரத்தில் நின்று கோட்டா வீட்டுக்குச் செல்லுங்கள் எனக் கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அப்பகுதியில் நின்ற இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர் ஒருவர் மதுபோதையில் போராட்டக்காரர் மீது அருகில் இருந்த வெற்றிலைக் கடையில் இருந்து பெட்டி ஒன்றைத் தூக்கி வீசினார். இதையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளையோர் அவருடன் முரண்பட்டபோது குறித்த ஊழியர் அங்கிருந்து தப்பியோடினார். பின்னர் குறித்த நபர் மீள அங்கு வந்தபோது அவரை முற்றுகையிட்ட போராட்டக்காரர்கள் அவரைக் கடுமையாக எச்சரித்தனர்.

சுமார் ஒரு மணிநேரம் இந்தப் போராட்டம் இடம்பெற்றதுடன், அரசுக்கு எதிராகப் பல கோஷங்களும் எழுப்பப்பட்டன. (100)

## மத்திய வங்கியின் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க நியமிக்கப்பட்டவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது ஆஸ்திரேலியாவில் இருக்கும் கலாநிதி நந்தலால் வீரசிங்கவிடம் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 7ஆம் திகதி இலங்கை வரவுள்ள அவர், மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை பொறுப்பேற்பது தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார் என உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அமைச்சுப் பதவியை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்டு தற்போது ஏற்பட்டுள்ள தேசிய நெருக்கடிக்குத் தீர்வு காண அனைவரும் முன்வர வேண்டும். - என்று அவர் பகிரங்க அழைப்பு விடுத்திருக்கின்றார்.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையிலான அரசு பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் வலுப்பெற்றுள்ள நிலையில், நேற்று நள்ளிரவு அனைத்து அமைச்சர்களும் பதவி விலகியுள்ளனர்.

அமைச்சரவையின் தலைவர்களான ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் பதவி விலகாத நிலையில், ஜனாதிபதியால் இன்று இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் பல்வேறு பொருளாதார மற்றும் உலகளாவிய காரணிகளால் தற்போதைய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. ஆசியாவின் முன்னணி ஜனநாயக நாடுகளில் ஒன்றாக, ஜனநாயகக் கட்டமைப்புக்குள்ளேயே இதற்குத் தீர்வு காணப்பட வேண்டியுள்ளது.

அனைத்து குடிமக்கள் மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக, தேசிய தேவை எனக் கருதி ஒன்றிணைந்து செயற்பட வேண்டியுள்ளது. அதற்காக அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்டு, தேசிய நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு ஒன்றிணையுமாறு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கின்றேன் - என்றார்.

## மத்திய வங்கி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவலை அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அரசுக்கு எதிரான போராட்டங்கள் வலுத்து வரும் நிலையில், பிரதமர் தவிர்ந்த அமைச்சர்கள் அனைவரும் நேற்றிரவு இராஜினாமா செய்துள்ளனர். இந்தநிலையில், இன்று தனது பதவி விலகலை மத்திய ஆளுநர் அறிவித்துள்ளார்.

## கோட்டாவுக்கு எதிராக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்கெடுப்போடு பல்கலையில் இருந்து யாழ். நகர் நோக்கிப் பேரணியாகச் சென்றது.

குறித்த பேரணி பலாலி வீதியூடாக பருத்தித்துறை வீதியை அடைந்து, அங்கிருந்து யாழ். மத்திய பஸ் நிலையத்தை சென்றடைந்தது. பஸ்நிலையம் முன்பாக சுமார் ஒரு மணி நேரம் மாணவர்கள் வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் அங்கிருந்து, கஸ்தூரியார் வீதியூடாக, ஸ்ரான்லி வீதியை அடைந்து அங்கிருந்து ஆரியகுள சந்தியை அடைந்து, மீண்டும் பலாலி வீதியூடாக மாணவர்கள் பேரணி பல்கலையை அடைந்தது.

அதேவேளை, மாணவர்கள் பேரணியாக ஸ்ரான்லி வீதியூடாகச் செல்லும் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகம் முன்பு சில நிமிடங்கள் தரித்து நின்று அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மஹிந்தரின் தங்காலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அரசாங்கத்துக்கு எதிராகவும், தற்போதைய பொருளாதார நெருக்கடிகளை ஆட்சேபித்தும் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பல மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

தொழில் வல்லுநர்கள், கலைஞர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலான மக்கள் நாட்டின் முக்கிய நகரங்களில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## காதில் பூச்சுற்றும் வேலை

தலையிடிக்குத் தலையணையை மாற்றிப் பயனில்லை என்பர். ஆனால் நாட்டின் ஆட்சித் தரப்பு அந்த மாதிரிதான் நடந்து கொள்கின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வு காணும் பெயரில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது அரசுத் தரப்பினரும் முன்னெடுக்கும் நகர்வுகள் இந்த வகையில்தான் இருக்கின்றன.

நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தக் காரணமாக இருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவி விலகக் கோரித்தான் நாட்டில் தொடர் போராட்டங்கள் வெடித்துள்ளன.

ஆனால், ஜனாதிபதியோ தாம் பதவி விலக மறுத்து, அமைச்சரவையை மாற்றி அமைப்பதன் மூலம் நிலைமையைச் சமாளிக்கலாம் என்று காய் நகர்த்துகிறார். அமைச்சரவையை மாற்றுவதற்குப் பெயர் ஆட்சி மாற்றம் அல்ல. மாறாக, ஆட்சிமாற்றத்தைக் கோரி வீதிகளில் இறங்கிப் போராடும் மக்களின் காதுகளில் பூச்சுற்றும் வேலை இது.

தாம் அமைக்கவிருக்கும் புதிய அமைச்சரவையில் வந்து இணையுமாறு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் கோரியிருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

ஆனால், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி எதுவும் இந்த அமைச்சரவைக்குள் வரப்போவதில்லை என்பது உறுதி.

அவை வலியுறுத்தும் ஆட்சி முறைமை மாற்றம், இந்த அமைச்சரவை மாற்றம் அல்ல. ஆகவே அமைச்சர்களை மாற்றும் இந்த அரசியல் திருகுதாள நடவடிக்கையில் ஏமாற அவை தயாராக இல்லை.

அப்படியானால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இப்போது செய்யப்போகும் அமைச்சரவை மாற்றத்தில் சம்பந்தப்படப் போகின்றவர்கள் ஆக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான ஆளும் கூட்டமைப்பில் இருந்தவர்களும், அவர்களை வெளியிலிருந்து ஆதரித்தவர்களும் மட்டும்தான்.

அந்த வகையில் பார்த்தால் தமது கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள விரிசல்கள், குழப்பங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்த்து வைக்கும் விவகாரமாக மட்டுமே இந்த அமைச்சரவை மாற்றம் நடைபெறப் போகின்றது என்பது தெளிவு.

நாடு முழுவதிலும் மக்கள் நடத்தும் போராட்டம், அவரது கூட்டமைப்பில் ஏற்பட்ட குழப்பத்திற்கு தீர்வு வேண்டி முன்னெடுக்கப்படுவது அல்ல. மக்கள் வீதிக்கு இறங்கியிருக்கும் நோக்கம் வேறு. உத்தேச அமைச்சரவை மாற்றம் மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்க்க முனையும் பிரச்சினைகள் வேறு.

மக்களின் பிரச்சினைக்கு – எதிர்பார்ப்புக்கு – உரிய தீர்வு கிட்டாத வரை மக்களின் போராட்டம் குறையப் போவதில்லை. மாறாக, அது மென்மேலும் தீவிரமடைந்து வீரியம் கொள்ளும். நாடு அத்தகைய நெருக்கடியை நோக்கித்தான் நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பது போல தோன்றுகின்றது.

ஆனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவோ இந்தப் பிரச்சினையின் ஆழத்தை – பொதுமக்களின் சீற்றத்தின் அர்த்த பரிமாணத்தை – புரிந்து கொள்ளாதவராக வேறு ஏதேதோ நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார். அவற்றின் விளைவை அவர் அடுத்து வரும் நாள்களில் புரிந்து கொள்ளும் கட்டாயம் ஏற்படும் என எதிர்பார்க்கலாம்.

# மக்கள் போராட்டத்துக்கு தலைவணங்கியே அமைச்சுப் பதவியை நான் துறந்துள்ளேன்!

## நாமல் விளக்கம்



அரசுக்கு எதிரான மக்களின் போராட்டத்துக்குத் தலைவணங்கி அமைச்சுப் பதவியைத் துறந்துள்ளேன் என இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பதவியை இராஜினாமா செய்துள்ள நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

நாடு என்றுமில்லாத பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ளது. இன்னமும் உரிய தீர்வு காணப்படவில்லை. இதற்கு ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை தான் பொறுப்புக்கூற வேண்டும்.

பொருளாதார நெருக்கடியால் மக்கள் மிகவும் கொதிப்படைந்துள்ளனர். அரசுக்கு எதிராக வீதிகளில் இறங்கி அவர்கள் போராடி வருகின்றனர்.

இந்நிலையில், மக்களின் போராட்டத்துக்குத் தலைவணங்கியும், புதிய அமைச்சரவையை நியமிக்குமாறு வலியுறுத்தியும் அமைச்சுப் பதவியைத் துறந்துள்ளேன்.

புதிய அமைச்சரவை தொடர்பிலும், பொருளாதார நெருக்கடிக்கானத் தீர்வு பற்றியும் ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து உரிய நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று நம்புகின்றேன். – என்றும் தெரிவித்துள்ளார்.

# மக்களின் நம்பிக்கையை இழந்தவர்கள் பதவி விலகவேண்டும் என்கிறார் மஹேல



இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டுப்படுத்தும் சிலர் மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டனர், எனவே அவர்கள் பதவி விலக வேண்டும் என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தன கோரியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் –

இந்தப் பிரச்சினைகள் மனிதனால் உருவாக்கப்பட்டவை என்றும், சரியான, தகுதி வாய்ந்தவர்களால் மாத்திரமே இதனைச் சரி செய்ய முடியும் என்றும் கூறியுள்ளார். நாட்டுக்கு நம்பிக்கையைக் கொடுக்க ஒரு நல்ல குழு தேவை. நேரத்தை வீணடிக்க வேண்டியதில்லை. தேவையற்ற காரணங்களைக் கூறாமல், சரியானதைச் செய்வதற்கான நேரம் இது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் அமுல் செய்யப்படுள்ள அவசரகாலச் சட்டம் மற்றும் ஊரடங்குச் சட்டத்தைக் கண்டு தாம் வருத்தமடைகிறோம் என குறிப்பிட்டுள்ள அவர், போராட்டம் நடத்துவதற்கு மக்களுக்கு உள்ள முழு உரிமையை அரசாங்கம் புறக்கணிக்க முடியாது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

போராட்டம் செய்பவர்களைக் காவலில் வைப்பது ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த நிலையில் நாட்டு மக்களை, துன்பங்களில் ஒற்றுமையாகப் பாதுகாக்க இங்கு பாரிய அவசரம் உள்ளது, என்று மஹேல தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.







# இலங்கை மக்களுக்கு ஆதரவு மாலைதீவிலும் ஆர்ப்பாட்டங்கள்!

இலங்கை மக்களுக்கு ஆதரவாகவும் இலங்கை அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மாலைதீவிலும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கை முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் கொழும்பில் மக்களும் எதிர்க்கட்சி அரசியல் பிரமுகர்களும் போராட்டத்தில் இறங்கினர்.

இந்நிலையிலேயே அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மாலைதீவில் உள்ள மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு
திங்கட்கிழமை
04.04.2022

# மத்திய தரைக்கடலில் படகு கவிழ்ந்து 100 பேர் சாவு

## ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அடைய சென்றபோது பரிதாபம்



ஆபிரிக்க நாடுகளில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு மத்திய தரைக்கடல் வழியாக படகில் சென்ற போது நேரிட்ட விபத்தில் 100 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். அல்ஜீரியா, லிபியா போன்ற வட ஆபிரிக்க நாடுகளில் வேலையில்லா திண்டாட்டம், வறுமை, சட்டம் - ஒழுங்கு சீர்கேடு போன்ற காரணங்களால் லட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர். ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அடைய அவர்கள் கள்ளத்தனமாக படகுகளில் பயணம் செய்வது தொடர்ந்து வருகிறது. அவ்வாறு 100க்கும் மேற்பட்டவர்களை ஏற்றிக் கொண்டு மத்திய தரைக் கடல் வழியாக சென்ற படகு ஒன்று இன்சின் பழுது காரணமாக நடுக்கட லில் சிக்கிக் கொண்டது.

4 நாள்கள் நடுக்கடலில் சிக்கி தவித்த அவர்கள், ஒரு கட்டத்தில் பீதி யில் தப்ப முயன்ற போது, கப்பல் கவிழ்ந்து 100க்கும் மேற்பட்ட மக்கள் கடல் நீரில் மூழ்கினர். இது குறித்து தகவல் அறிந்து வந்த மீட்புக் குழுவினர் ஒரு சிலரை மட்டும் மீட்டனர். உக்ரைனில் இருந்து வரும் அகதிகளை ஏற்றுக் கொள்ளும் ஐரோப்பிய நாடுகள், தங்களை ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று உயிர் தப்பிய சிலர் வேதனையுடன் தெரிவித்தனர். ஆபிரிக்க நாடுகளில் இருந்து வருவோரை தடுக்க கடும் கண்காணிப்புகளை ஐரோப்பிய நாடுகள் பின்பற்றி வருகின்றன.

# கலைக்கப்பட்டது பாக். நாடாளுமன்றம்


## அதிபர் ஆரிப் ஆல்வி அறிவிப்பு



பாகிஸ்தான் பிரதமராக இம் ரான் கான் நீடிப்பார் என்று அதிபர் ஆரிப் ஆல்வி அறிவித்திருக்கிறார். பாகிஸ்தானில் பிரதமர் இம்ரான் கான் தலைமையிலான பாகிஸ் தான் தெஹ்ரிக்-இ-இன்சாவ் கட்சியின் ஆட்சி நடைபெற்று வருகிறது. கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதில் தோல்வி, விலைவாசி உயர்வு, உள்நாட்டு பாதுகாப்பு பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினைகளை கார ணம் காட்டி எதிர்க்கட்சிகள் இம் ரான் கானுக்கு எதிராக கடந்த திங் கட்கிழமை நம்பிக்கையில்லா பிரேரணையைதாக்கல்செய்தன. இந்த பிரேரணையின் மீது வாக் கெடுப்பு நடைபெறுவதாக இருந் தது. அரசியல் பரபரப்புக்கு இடையே நாடா ளுமன்றம் நேற்று கூடியது. கூட்டம் தொடங் கியதும் எதிர்க் கட்சி உறுப்பினர் கள் இம்ரான் கான் அரசுக்கு எதிரான கருத்துக்களை முன் வைத்தனர்.

இவற்றை ஏற்க மறுத்த சபாநா யகர், போதுமான அளவில் ஆளுங்கட்சி உறுப்பி னர்கள் அவையில் இல்லாததமையால் வாக்கெடுப்பு நடத்த முடியாது என கூறி நம்பிக்கையில்லா பிரேர ணையை நிராகரித்தார். இது போன்ற சூழலில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா பிரேரணை அரசியல் சாசனத் திற்கு எதிரானது என்றும் கூறி வாக்கெடுப்பை வரும் 25ஆம் திக திக்கு ஒத்திவைத்தார். இதனி டையே நாடாளுமன்றத்திற்கு வராமல் தனது வீட்டில் இருந்தபடி உரையாற்றிய இம்ரான் கான், பாகிஸ்தான் நாடாளுமன்றத்தை கலைக்க வேண்டும் என்று அந்நாட்டு அதிபர் ஆரிப் ஆல்விக்கு கோரிக்கை விடுத்தார்.

இதனை ஏற்ற அதிபர் ஆரிப் ஆல்வி, நாடாளுமன்றத்தை கலைத்து உத்தரவிட்டமையுடன் 90 நாள்களுக்குள் தேர்தல் நடத் தப்படும் என்றும் அறிவித்துள்ளார். இம்ரான் கானின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு ஒகஸ்ட் வரை உள்ள நிலையில், நாடாளுமன் றம் கலைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நிராகரிக்கப்பட்டதால் உச்சநீதிமன் றத்தில் முறையிட எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. இதனிடையே பாகிஸ்தானின் புதிய பிரதமர், போஸ் ரிப் தான் என்று எதிர்க் கட்சிகள் திட்டவட்டமாக அறி வித்துள்ளன. இம்ரான் கான் பிரதமர் இல்லை என்று பாகிஸ் தான் அமைச்சரவை செயலாளர் அறிவித்த நிலையில் ஜனாதிபதி இந்த புது அறிவிப்பை வெளியிட் டுள்ளார்.



## அமெரிக்காவில் பயங்கரம் ஆறுபேர்சுட்டுக்கொலை

அமெரிக்காவின் சாக்ரமெண்டோ நகரில் நேற்று அதிகாலை மர்ம நபர்களால் துப்பாக்கிச்சூடு நடத்தப் பட்டது. சத்தம் கேட்ட மக்கள் அலறியடித்து நாலாபக்கம் சிதறி ஓடினர். தகவலறிந்த வந்த பொலிஸார் விசாரணை நடத்தியதில் துப்பாக்கிச்சூட்டில் 6 பேர் உயிரிழந்தமையும், 9 பேர் படுகாயமடைந்தமையும் தெரிய வந்தது.

படுகாயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது தொடர்பான வீடியோ டுவிட்டரில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த வீடியோ காட்சிகளை வைத்தும், சம்பவ இடத்தில் விசாரணை நடத்தியதை வைத்தும் சாக்ரமெண்டோ போலீசார் வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர்.

## சினிமாவுக்கு முழுக்கு போட்ட பொலிவுட் நடிகர் ஜிம் கேரி



பொலிவுட் காமடி நடிகர் ஜிம் கேரி சினிமாவை விட்டு விலகுகிறேன் என அறிவித்துள்ளார். 'தி மாஸ்க்', 'ப்ரூஸ் தி அல்மைட்டி', 'பேட்மேன் பார் எவர்', 'கிக்-ஆஸ் 2', 'லையர் லையர்' உள்பட பல படங்களில் நடித்துள்ள அவர், 1983ல் வெளியான 'தி செக்ஸ் அன்ட் வயலென்ஸ் பேமிலி ஹவர்' என்ற படத்தில் அறிமுகமானார். 1994ல் வெளியான 'ஏஸ் வென்ச்சுரா பெட் டிடெக்டிவ்', 'தி மாஸ்க்', 'டம்ப் அன்ட் டம்பர்' போன்ற படங்கள் ஹிட்டாகின. 'தி மாஸ்க்' படம் அவருக்கு உலகம் முழுவ தும் அதிகமான ரசிகர்களைப் பெற்றுத்தந்தது. இந்நிலையில், ஜிம் கேரியின் வாழ்க்கையில் பல எதிர் பாராத சம்பவங்கள் நடந்து அவரை மனஉளைச்சலுக்கு ஆளாக்கியது.

60 வயது நிரம்பிய அவர், திடீரென்று சினிமாவில் இருந்து விலகுகிறேன் என அறிவித்துள்ளார். கடந்த 2020ல் அவரது நடிப்பில் கடைசியாக வெளியான படம், 'சோனிக் ஹெட்ஜ்ஹாக்'. தற்போது இதன் 2ம் பாகம் 'சோனிக் ஹெட்ஜ்ஹாக் 2' என்ற பெயரில் விரைவில் திரைக்கு வருகிறது. இப்படம் தனது கடைசி படம் என்றும், நிறைய படங்களில் நடித்துவிட்டமை யால் இனி ஓய்வெடுக்க விரும்புகிறேன் என்றும் ஜிம் கேரி தெரிவித்துள்ளார். இது அவரது ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. சில நாள்களுக்கு முன்பு பொலிவுட் நடிகர் புரூஸ் வில்லிஸ் சினிமாவில் இருந்து ஓய்வுபெறுகிறேன் என அறிவித்தார்.

# உலகளவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 49.17 கோடியாக அதிகரித்துள்ளது



உலக அளவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 49.17 கோடியாக அதிகரித்துள்ளது.சீனாவின் வுகான் நகரில் 2019ம் ஆண்டு கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது கொரோனா வைரஸ் 221 நாடுகள், பிரதேசங்களுக்கு பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

கொரோனாவை கட்டுப்படுத்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையிலும் வைரஸ் உருமாற்றமடைந்து பாதிப்பு அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 49 கோடியே 17 லட்சத்து 46 ஆயிரத்து 291 ஆக அதி கரித்துள்ளது. வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் 5 கோடியே 90 லட்சத்து 36 ஆயிரத்து 455 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 42 கோடியே 65 லட்சத்து 33ஆயிரத்து 692 பேர் குணமடைந்துள்ளனர்.

ஆனாலும், கொரோனா வைரஸால் உலகம் முழுவதும் இதுவரை 61 லட்சத்து 76 ஆயிரத்து 144 பேர் உயிரிழந்துள்ளனர்.

**உலக நாடுகளும் அதன் மொத்த பாதிப்புகளும்**

| | |
|---|---|
| அமெரிக்கா | 81,832,612 |
| இந்தியா | 43,028,863 |
| பிரேஷில் | 29,999,816 |
| பிரான்ஸ் | 25,997,852 |
| ஜேர்மனி | 21,646,375 |

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


## நாட்டின் இன்றைய நிலைமைக்கு

# 20க்குக் கை தூக்கியோரும் பொறுப்புக் கூற வேண்டும்!



### திருமலை எம்.பி. இம்ரான் காட்டம்

(ஹஸ்பர்)

ஜனாதிபதியின் தூர நோக்கற்ற செயற்பாடுகளாலேயே நாடு இன்று பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இதற்கு 20 ஆம் திருத்தத்திற்கு கை தூக்கிய அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இன்று அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அரசமைப்பின் 20 ஆம் திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரம் மேலும் அதிகரிக்கப்பட்டது. இந்த அதிகாரத்தினை அவர் தன்னிச்சையாகப் பயன்படுத்தியதாலேயே நாடு இன்றைய நிலைக்குத் தள்ளப்பட்டது.

எனவே, ஜனாதிபதிக்கு அதிகாரத்தைப்பெற்றுக்கொடுக்கும் இந்த 20 ஆம் திருத்தத்திற்கு ஆதரவு வழங்கிய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். ஏனெனில் அவர்கள் வழங்கிய ஆதரவே ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு வலுச்சேர்த்தது.

ஜனாதிபதித் தேர்தல் தொடக்கம் பொதுத் தேர்தல் வரை பொதுஜன பெரமுனவோடு இணைந்து பணியாற்றியவர்கள் 20 ஆம் திருத்தத்திற்கு ஆதரவு வழங்கியமைக்கு ஏதோ ஒரு வகையில் காரணம் கூற முடியுமாக இருக்கும்.

எனினும், ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் எம்மோடு ஒன்றாக இருந்தவர்கள், தேர்தல் மேடைகளில் எம்மோடு சேர்ந்து ஜனாதிபதிக்குஎதிராகவசைபாடியவர்கள், நாடாளுமன்றத்தில் கையில் 20 எதிர்ப்பு அடையாளத்தைப் பொறித்துக் கொண்டிருந்தவர்கள், ஜனாதிபதிக்குவலுச்சேர்த்த 20 ஆம் திருத்தத்திற்குதிடீரென ஆதரவு வழங்கியமை தான் பெரிய ஆச்சரியமாக உள்ளது.

நேர்மையான சிந்தனை உள்ளவர்கள் இந்தச் செயலை இன்னும் வியப்போடுதான் பார்க்கின்றனர். குர்ஆன், ஹதீஸை முன்னிருத்தி தங்களைப் பலப்படுத்திக் கொண்ட கட்சியைச் சேர்ந்த இவர்கள் எதிர்க்கட்சியோடு ஒன்றாக இயங்கி, அவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்து, பின்னர் பெரும் நம்பிக்கைத் துரோகத் தில் ஈடுபட்டமை மக்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளமை எமக்குத் தெரிகின்றது.

இவர்கள் திடீரென தடம் மாறியமைக்கு காரணம் என்ன, அரசோடு இவர்களுக்குள்ள 'டீல்' என்ன என்பவை குறித்தெல்லாம் பொதுமக்கள் நன்கு விளங்கி வைத்துள்ளார்கள். பொதுமக்களை எப்போதும் உணர்ச்சி வசப்படுத்தி ஏமாற்ற முடியாது என்பதையே இது தெளிவுபடுத்துகின்றது.

எரிபொருளுக்கு வரிசை, எரிவாயுவுக்கு வரிசை, பால்மா பெற முடியாது. இரவு பகல் பாராது தொடர்ச்சியான மின்வெட்டு, வருமானம் அதிகரிக்காத நிலையில் பொருள்களின் விலை மூன்று மடங்கு அதிகரிப்பு. இவைதான் இன்றைய நாட்டு நிலைமை. இதனால் பொதுமக்கள் எதிர் நோக்கும் அவலங்களும், பிரச்சினைகளும் சொல்ல முடியாதவை.

பொதுமக்களுக்கு இவ்வளவு சோகங்கள் இருந்தும் 20க்கு ஆதரவு வழங்கியோர் இன்று வாய்மூடி மௌனமாக இருக்கின்றனர்.

பொதுமக்களின் வாக்குகளினால் அதிகாரத்துக்கு வந்தவர்கள் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கொஞ்சமாவது கவனம் செலுத்தவேண்டும். குறைந்தது கருத்துக்களாவது சொல்ல வேண்டும். இவை எதுவுமில்லாத அளவுக்கு அவர்களது 'டீல்' அவர்களைக் கட்டிப் போட்டுள்ளது. அவர்களை மௌனிக்கச் செய்துள்ளது. - இவ்வாறு அவர்மேலும்தெரிவித்துள்ளார்.





# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களும் போராட்டத்தில்!

கிழக்குப் பல்கலைக்கழக மட்டக்களப்பு வந்தாறுமூலை பல்கலைக்கழக வளாகத்துக்கு முன்னால் பல்கலைக்கழக மாணவர்கள் மின்சார தடை மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு, அத்தியாவசிய பொருள்களின் விலைஏற்றம்போன்றவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தீப்பந்தம் ஏந்தி நேற்று இரவு ஊரடங்கு சமயம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சமன் தலைமையில் இரவு 7.15 மணிக்கு இடம்பெற்ற இப் பேராட்டத்தில்சுமார்நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு ஊரடங்கு சட்டத்தை மீறி பல்கலைக்கழகத்தில் இருந்து செங்கலடிக்கு எதிர்ப்பு ஊர்வலமாக செல்ல முற்பட்டனர்.

இதன் போது அவர்களை பல்கலைக்கழக வாசலில் வைத்து பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதனையடுத்து போராட்டக்காரர்கள் அரசுக்கு எதிராக பல்வேறு சுலோகங்களைத் தாங்கியவாறும், கோஷங்களைஎழுப்பியவாறும் தீப்பந்தம் ஏந்தி சுமார் ஒரு மணித்தியாலம் போராட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்

இதேவேளை அந்த பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.





# ஆயுள்வேத வைத்தியர்களுக்கு கிழக்கில் அக்குபஞ்சர் பயிற்சி

(பைசல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாணத்தில் அக்குபஞ்சர் சிகிச்சை முறைகளை மேம்படுத்துவதற்கான செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் Ceragem Lanka (Pvt) Ltd நிறுவனமும், பொரளை ஆயுள்வேத போதனா வைத்தியசாலையின் கொரியன் அக்குபஞ்சர் பிரிவும் இணைந்து அந்த சிகிச்சை தொடர்பான விளக்கப் பயிற்சிகளை மாகாணத்திலுள்ள ஆயுள்வேத வைத்தியர்களுக்கு முன்னெடுத்து வருகின்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் தலைமையில் நேற்று முன்தினம் கிழக்கு மாகாண முதலமைச்சின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த அக்குபஞ்சர் சிகிச்சை விளக்கப் பயிற்சிகள் பொரளை ஆயுள்வேத போதனா வைத்தியசாலையின் கொரியன் அக்குபஞ்சர் பிரிவு வைத்தியர், Ceragem Lanka (Pvt) Ltd நிறுவனத்தின் தலைவர் ஆகியோரினால் வழங்கி வைக்கப்பட்டன. இதில் திருகோணமலை பிராந்திய ஆயுள்வேத வைத்தியசாலை, பஞ்சகர்ம வைத்தியசாலைகளில் கடமையாற்றுகின்ற வைத்தியர்கள் பலர் பங்குபற்றி அந்த வைத்திய சிகிச்சை தொடர்பான விளக்கப் பயிற்சிகளை பெற்றுக்கொண்டனர்.

பயிற்சி நிறைவின்போது குறித்த நிறுவனத்தின் தலைவரினால் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளரிடம் Massage bed, Slim belt போன்றவை வழங்கி வைக்கப்பட்டன

## திருமலையில் கறுப்புக் கொடி

நாடளாவிய ரீதியில் நேற்றைய தினம் ஊரடங்குக்கு மத்தியில் அரசுக்கு எதிராகப் பாரிய ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட சமயத்தில் திருகோணமலை நகரை அண்டிய பிரதான வீதிகளில் வீதி எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. சமூக வலைத்தளங்களில் வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் அன்றையதினம் கறுப்புக் கொடிகளை பறக்க விடுமாறு செய்திகள் பரப்பப்பட்டு வந்த நிலையில், திருகோணமலை நகரின் வீதிகள் எங்கும் இவ்வாறு கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இரவு நேரத்தில் இருளில் மூழ்கின்றது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை!

## அங்கஜன் எம்.பி. நேரில் விஜயம்





யாழ். தென்மராட்சி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தொடர்ச்சியான மின்தடையால் நோயாளர்கள் அவதியுறும் நிலை தொடர்பில் ஆராய்வதற்காக யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் நேரடியாக வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மின்வெட்டு நேரம் வைத்தியசாலையில் உள்ள மின்பிறப்பாக்கிகள் செயலிழந்து காணப்படுகின்றன எனச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் திடீரென விஜயம் மேற்கொண்ட அங்கஜன், வைத்தியசாலையின் பல பகுதிகளை ஆராய்ந்தார். அங்கு கூடியிருந்த மக்களிடம் வைத்தியசாலையின் செயற்பாடுகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் வினவிய போது இவ்வாறு பதிலளித்துள்ளனர்.

நாட்டில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் சுழற்சி முறையிலான மின்வெட்டு காரணமாக இந்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்படும் நோயாளர்கள் இரவு நேரங்களில் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். அதுமட்டுமல்லாது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நோயாளர்கள் நிம்மதியாக சாப்பிட முடியாது, தூங்கவும் முடியாமல் அவதிப்படுகின்றனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனையடுத்து வைத்தியசாலையின் மலசலகூடத் தொகுதியைப் பார்வையிட்ட அங்கஜன் பல குறைபாடுகள் இருப்பதை வைத்தியசாலை அத்தியட்சகரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

வைத்தியசாலையிலிருந்து வட மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் ஆறுமுகம் கேதீஸ்வரனைத் தொடர்பு கொண்ட அங்கஜன், மேற்படி வைத்தியசாலையில் செயலிழந்துள்ள மின்பிறப்பாக்கிகளை உடனடியாக சீர் செய்யுமாறு சுகாதாரப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை தொடர்பில் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகள் எழுந்துவரும் நிலையில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனும் அங்கஜன் எம்.பியுடன் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை மின்சார சபையின் கோரிக்கையை நிராகரித்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

இலங்கை மின்சார சபையின் 7 மணித்தியால மின்தடை கோரிக்கையை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு நிராகரித்துள்ளது. நாட்டில் சுழற்சிமுறையில் 7 மணித்தியாலங்கள் மின்தடையை நடைமுறைப்படுத்த மின்சார சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில், மேற்படி இக்கோரிக்கையை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு நிராகரித்துள்ளது. இதன்படி, 5 மணித்தியால மின்தடை நடைமுறைப்படுத்தப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஏ முதல் டபிள்யு வரையான அனைத்து வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களிலும், இன்று காலை முதல் மாலை வரையில் 3-4 மணித்தியாலங்களும், மாலை முதல் இரவு 10 மணிக்கு இடைப்பட்ட காலப்பகுதியினுள் 1 - 2 மணித்தியாலங்களும் மின்தடை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

# சட்டவிரோத மதுபான உற்பத்தி ஊர்காவற்துறையில் ஒருவர் கைது

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காரைநகர் - களபூமி பகுதியில் 350 மில்லிலீற்றர் சட்டவிரோத மதுபானத்துடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். காரைநகர் - களபூமியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவரே நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்துறை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் புலனாய்வு பிரிவினர் மற்றும் பொலிஸார் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இன்று (திங்கட்கிழமை) ஊர்காவற்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முள்ளியவளையில் வாள்வெட்டு எழுவர் வைத்தியசாலையில் சேர்ப்பு!

முல்லைத்தீவு - முள்ளியவளை பகுதியில் இடம்பெற்ற இரு குழுக்களுக்கிடையிலான வாள்வெட்டு சம்பவத்தின் போது காயமடைந்த ஏழு பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயத்துக்கு அருகில் இரு இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு வாள்வெட்டில் முடிந்துள்ளது.

இந்த வாள்வெட்டுச் சம்பவத்தின் போது 4 ஆம் வட்டாரம் முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த நான்கு பேர் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளமையுடன், மேலும் காயமடைந்த மூவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இந்த வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் காயத்துடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என முள்ளியவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அமைதியான ஜனநாயக போராட்டங்களை மதிக்கின்றவரே எமது தலைவர் கோட்டாபய!

## ஜோன்ஸ்டன் புகழாரம்



நமது ஜனாதிபதி மிகவும் ஜனநாயகமான தலைவர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைதியான போராட்டங்களுக்கு ஒருபோதும் பிரச்சினையை ஏற்படுத்தாத தலைவர், ஆனால் இந்த ஆர்ப்பாட்டத்தில் வன்முறை உள்ளது, இது அமைதியான போராட்டமாகத் தெரியவில்லை என ஆளும் தரப்பு பிரதம கொறடா, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஊடகங்களுக்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

வன்முறை கலந்து இருந்ததாலே அரசு மற்றும் தனியார் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இந்த வன்முறையில் ஈடுபட்ட அனைவருக்கும் எதிராக சட்டத்தை அமுல்படுத்துமாறு அமைச்சரவை அமைச்சர்கள் என்ற வகையில் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தோம்.

நாங்கள் அமைதியான போராட்டங்களுக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் வன்முறைகளை அனுமதிக்க முடியாது. நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டும். மேலும், பொதுச் சொத்துக்களும் பாதுகாக்கப்பட வேண்டும். அது அரசின் கடமை. ஜனாதிபதியிடம் நாம் முன்வைத்த கோரிக்கை அது. அவர் எப்போதும் ஜனநாயகத்தைப் பற்றியே பேசுவார்.

காலி முகத்திடலுக்கு அருகில் ஆர்ப்பாட்டம் செய்தவர்களுக்கு தனது அலுவலகத்துக்கு செல்ல அவர் அனுமதித்தார். இரண்டாவது முறையாக அவரின் வீட்டுக்கு சென்று தாங்கள் அமைதியை விரும்பவில்லை, வன்முறையை விரும்புகிறோம் என்ற செய்தியை தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தப் போராட்டம் சில சனல்களில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. வெளிப்படையாக ஜனாதிபதி கொல்லப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. சனல்களில் வரும் காட்சிகளைப் பார்த்தால் ஜனாதிபதியை கொல்லுங்கள் என்று கூக்குரலிடுவதைக் காணலாம். வழக்கம் போல் அவர்களை வட்டமிட்டு காட்டுமாறு ஊடகங்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

நாங்கள் ஒரு போதும் வன்முறைக்கு அடிபணிய மாட்டோம். அதுதான் யதார்த்தம். ஆனால் நாங்களும் மக்களை அமைதியான போராட்டத்துக்குக் கொண்டு வந்துள்ளோம். நாங்களும் காலிமுகத்திடலுக்கு வந்தோம். அரசை கண்டித்தும் போராட்டம் நடத்தினோம். ஒரு கல்லையாவது அடித்தோமா? இதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பது இப்போது தெளிவாகிவிட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551பு, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.04.2022இல் வெளியிடப்பெற்றது.